# 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5 ஆம் தேதி செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற விருத்தாசலம் நகர்மன்றத்தின் சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை :**
**திரு. க. பாலு,**
**தனி அதிகாரி,**
**விருத்தாசலம் நகராட்சி.**

**பொருள் எண். 1.**

விருத்தாசலம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO) மூலம் வட்டி இல்லா கடன் நிதி 2017–18ன் கீழ் ரூ.429.20 இலட்சம் 12500 வீடுகளுக்கு புதியதாக குடிநீர் இணைப்பு வழங்கும் (Internal Plumbing) பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.13277/2018/WS1,நாள்.19.06.2018ல் நிர்வாக அனுமதியளித்தற்கிணங்க 28.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1 | M/S Vinayaga Associates,<br>11 A ,Arumugapillai street,<br>Pudupalayam,<br>Cuddalore. | (+) 4.56 % அதிகம் |
| 2 | M/S Amirthalingam & sons,<br>1/6 ,Irrumbai main road,<br>Aurovil(via) Vanur(TK),<br>Villupuram. | (+) 8.42 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் M/S Vinayaga Associates,11 A ,Arumugapillai street,Pudupalayam,Cuddalore அவர்கள் மதிப்பீட்டைவிட அதிகமாக அளித்துள்ள 4.56 % ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2425/18/இ1)

**தீர்மானம் எண். 3346 , நாள். 05.03.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2.**

விருத்தாசலம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2016–2017 ன் கீழ் ரூ.103.00 இலட்சம் மதிப்பீட்டில் வயலூர் உரக்கிடங்கில் பல ஆண்டுகாலமாக சேகரிக்கப்பட்டுள்ள குப்பைகளை பிரித்து உயர் சுரங்க (BIO MINING) முறை மூலம் அகற்றி நிலத்தை மறு சீரமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.1191/2019/P3,நாள்.21.01.2019ல் நிர்வாக அனுமதியளித்தற்கிணங்க 28.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1 | Thiru.V.R.Manikandan,<br>Junction Road,Vriddhachalam. | (+) 4.85 % அதிகம் |
| 2 | Thiru.M.Kothandam,<br>39,Veeranathur village,<br>Pallipet T.K,<br>Thiruvalluvar District. | (+) 9.55 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் Thiru.V.R.Manikandan,Junction Road,Vriddhachalam.அவர்கள் மதிப்பீட்டைவிட அதிகமாக அளித்துள்ள 4.85 % ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 3885/18/இ1)

**தீர்மானம் எண். 3347 , நாள். 05.03.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3.**

தமிழ்நாடு நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு செயலகம், பொது சட்ட விதி , அறிவிப்பு உத்திரவுகள் மற்றும் ஒழுங்குமுறைகள் போன்றவை அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் முறை (MAI) நாள் .04.02.2019–ன் படி தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் ந.க.எண்.50977/2018/டிபி3, நாள்.07.03.2019–ம் தேதிய நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் மேற்படி விதிமுறைகளை 01.04.2019 முதல் நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும் என சுற்றறிக்கைவிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் –2019 ஐ வருகின்ற 01.04.2019 முதல் நடைமுறைக்கு கொண்டுவர மன்றத்தின் பதிவிற்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –**

01.04.2019 முதல் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள்–2019 நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 3348 , நாள். 05.03.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4.**

நகராட்சிகள் நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.31159/டிபி3 நாள்.05.03.2019–ல் தமிழ்நாடு அரசிதழ் எண் 43. பகுதி III பிரிவு 1(a), நாள் 04.02.2019–ல் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உள்ளாட்சிகளிலும் கட்டிட மற்றும் திட்ட அனுமதி வழங்குவது தொடர்பாக, தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 ஆணை வெளியிடப்பட்டுள்ளதனடிப்படையில் தற்போழுது கட்டிட விண்ணப்பத்துடன் கூர்ந்தாய்வு கட்டணமாக பெறப்படும் ரூ.500–ஐ பதிவு கட்டணமாக தொடர்ந்து வசூலிக்க வேண்டும் எனவும், கூடுதலாக விதி எண்.7(2)–ல் குறிப்பிட்டுள்ளவாறு, நடைமுறையில் உள்ள அதிகார பகிர்வுக்கு உட்பட்டு திட்ட அனுமதிக்கான கூர்ந்தாய்வு கட்டணம் உள்ளாட்சிகளால் வசூலிக்கப்பட்டு உரிய தலைப்பில் செலுத்தப்பட வேண்டும் எனவும், விதி 14–ல் கட்டிட அனுமதி காலம் 5 ஆண்டுகள் மற்றும் ஒரு முறை கால நீட்டிப்பு காலம் 3 ஆண்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளதால் கட்டிட அனுமதி கட்டணத்தை 5 ஆண்டுகளுக்கு நீட்டித்து அனுமதி வழங்குவதற்கேற்பவும் புதுப்பித்தல் காலத்தை 3 ஆண்டுகளுக்கு வழங்குவதற்கேற்பவும் மன்ற ஒப்புதலுடன் மாற்றியமைத்து விதிகளின்படி கட்டண விகிதங்களை பிரசுரம் செய்து நடைமுறைப்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே கட்டிட அனுமதி 3 ஆண்டுகளுக்கு வழங்குவதற்கு இந்நகராட்சியில் நகர்மன்ற தீர்மான எண் நாள். ல் ஒப்புதல் பெறப்பட்டு தற்போதைய கட்டணம் நடைமுறையில் உள்ளது. மேற்கண்ட புதிய விதிகளின்படி கட்டிட அனுமதி வழங்கப்படுவதற்கான காலம் மாற்றியமைக்கப்பட்டு இதற்குண்டான வசூல் செய்யப்பட வேண்டிய தொகையை உயர்த்தி பின்வருமாறு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. இதன்படி 306(1)ன்படி மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும் இதற்குண்டான செலவுத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு –

01.04.2019 முதல் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள்–2019 நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 3349 , நாள். 05.03.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**உள்ளாட்சி துறை அறிவைக்கை**
**விருத்தாசலம் நகராட்சி**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட கட்டிட அனுமதி கோரும் மனுக்கள் மீது வசூலிக்கப்படும் அபிவிருத்திக் கட்டணம், கட்டிட அனுமதி கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் **01.01.2019** முதல் திருத்தியமைக்கப்பட்ட விவரப்பட்டியல் பற்றிய அறிவிப்பு.

| வ.எண். | 1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்ட பிரிவு | விபரம் | கால அளவு | பரப்பளவு | தற்போது வசூலிக்கப்படும் கட்டணம் ரூ | திருத்தியமைக்கப்பட்ட புதிய கட்டணம் 01.04.2019 முதல் |
|---|---|---|---|---|---|---|
| I | | விண்ணப்ப கட்டணம் | 5 ஆண்டுகள் | | | 200.00 |
| 2 | | அபிவிருத்தி கட்டணம் | | | | |
| அ | | குடியிருப்பு உபயோகம் | | | | |
| 1 | | நிலம் | 5 ஆண்டுகள் | 1 ச.மீ | 2.00 | 5.00 |
| 2 | | கட்டிடம் | 5 ஆண்டுகள் | 1 ச.மீ | 5.00 | 15.00 |
| **U.G Floor / G. Floor / First Floor / 2nd Floor and etc.,** | | | | | | |
| ஆ. | | தொழிற்சாலை உபயோகம் | | | | |
| 1 | | நிலம் | 5 ஆண்டுகள் | 1 ச.மீ | 6.00 | 15.00 |
| 2 | | கட்டிடம் | 5 ஆண்டுகள் | 1 ச.மீ | 15.00 | 30.00 |
| **U.G Floor / G. Floor / First Floor / 2nd Floor and etc.,** | | | | | | |
| இ. | | வணிக உபயோகம் | | | | |
| 1 | | நிலம் | | 1 ச.மீ | 8.00 | 20.00 |
| 2 | | கட்டிடம் | | 1 ச.மீ | 20.00 | 40.00 |
| **U.G Floor / G. Floor / First Floor / 2nd Floor and etc.,** | | | | | | |
| ஈ. | | பள்ளி மற்றும் இதர இனம் | | | | |
| 1 | | நிலம் | 5 ஆண்டுகள் | 1 ச.மீ | 2.00 | 5.00 |
| 2 | | கட்டிடம் | 5 ஆண்டுகள் | 1 ச.மீ | 5.00 | 15.00 |
| **U.G Floor / G. Floor / First Floor / 2nd Floor and etc.,** | | | | | | |
| 3 | | கட்டிட அனுமதி கட்டணம் | | | | |
| அ. | | மனையை அங்கீகரிக்க | 5 ஆண்டுகள் | 300 ச.மீ வரை | 150.00 | 500.00 |
| ஆ | | மனையை அங்கீகரிக்க | 5 ஆண்டுகள் | 301முதல் 600 ச.மீ வரை | 250.00 | 600.00 |
| இ | | மனையை அங்கீகரிக்க | 5 ஆண்டுகள் | 601 முதல் 1000 ச.மீ வரை | 350.00 | 800.00 |
| ஈ | | மனையை அங்கீகரிக்க | 5 ஆண்டுகள் | 1001 முதல் 1500 ச.மீ வரை | 450.00 | 1000.00 |
| உ | | மனையை அங்கீகரிக்க | 5 ஆண்டுகள் | 1501 க்கு மேல் | 50.00 | 100.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் | | |
| 4. | | **குடியிருப்பு கட்டிடம்** | | | | |
| அ. | | அடிநிலை தரைகீழ் தளம் (U.G.Floor) | 5 ஆண்டுகள் | 1 சதுர மீட்டருக்கு | 7.00 | 15.00 |
| ஆ. | | தரைதளம் (Ground Floor) | 5 ஆண்டுகள் | 1 சதுர மீட்டருக்கு | 7.50 | 20.00 |
| இ. | | முதல் தளம் (First Floor) | 5 ஆண்டுகள் | 1 சதுர மீட்டருக்கு | 10.00 | 25.00 |
| ஈ. | | இரண்டாம் தளம் (Second Floor) | 5 ஆண்டுகள் | 1 சதுர மீட்டருக்கு | 12.00 | 30.00 |
| உ. | | மூன்றாம் தளம் (Third Floor) | 5 ஆண்டுகள் | 1 சதுர மீட்டருக்கு | 15.00 | 35.00 |
| ஊ. | | மூன்றாம் தளத்திற்கு மேல் ஒவ்வொரு தளத்திற்கும் (Above Third Floor) | 5 ஆண்டுகள் | 1 சதுர மீட்டருக்கு | 20.00 | 40.00 |
| 5. | | **தொழிற்சாலை மற்றும் வணிக கட்டிடம்** | | | | |
| அ. | | அடிநிலை தரைகீழ் தளம் (U.G.Floor) | 5 ஆண்டுகள் | 1 சதுர மீட்டருக்கு | 20.00 | 40.00 |
| ஆ. | | தரைதளம் (Ground Floor) | 5 ஆண்டுகள் | 1 சதுர மீட்டருக்கு | 20.00 | 45.00 |
| இ. | | முதல் தளம் (First Floor) | 5 ஆண்டுகள் | 1 சதுர மீட்டருக்கு | 30.00 | 50.00 |
| ஈ. | | இரண்டாம் தளம் (Second Floor) | 5 ஆண்டுகள் | 1 சதுர மீட்டருக்கு | 40.00 | 60.00 |
| உ. | | மூன்றாம் தளம் (Third Floor) | 5 ஆண்டுகள் | 1 சதுர மீட்டருக்கு | 50.00 | 70.00 |
| ஊ. | | மூன்றாம் தளத்திற்கு மேல் ஒவ்வொரு தளத்திற்கும் (Above Third Floor) | 5 ஆண்டுகள் | 1 சதுர மீட்டருக்கு | 60.00 | 80.00 |
| 6. | | மதில் சுவர் கட்ட | 5 ஆண்டுகள் | 30 மீட்டர் நீளத்திற்கு | 200.00 | 500.00 |
| | | மதில் சுவர் கட்ட | 5 ஆண்டுகள் | 30 மீட்டருக்கு மேல் ஒவ்வொரு 10 மீட்டர் நீளத்திற்கும் | 50.00 | 100.00 |
| 8. | | கைபம்பு போட | 5 ஆண்டுகள் | ஒன்றுக்கு | 100.00 | 500.00 |
| 9. | | மல அறை தொட்டி ஒன்று கட்ட | 5 ஆண்டுகள் | ஒன்றுக்கு | 200.00 | 1000.00 |
| 10. | | மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைத்துக்கொள்ள | 5 ஆண்டுகள் | ஒன்றுக்கு | – | 500.00 |
| 11. | | குளியலறையுடன் கூடிய கழிவறை கட்ட | 5 ஆண்டுகள் | ஒன்றுக்கு | 300.00 | 600.00 |
| 12. | | குளியலறை கட்ட | 5 ஆண்டுகள் | ஒன்றுக்கு | 150.00 | 500.00 |
| 13. | | கழிவறை கட்ட | 5 ஆண்டுகள் | ஒன்றுக்கு | 150.00 | 500.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 14. | | மாடிப்படி அமைக்க | 5 ஆண்டுகள் | ஒன்றுக்கு | – | 400.00 |
| 15. | | | 5 ஆண்டுகள் | கட்டிட அனுமதி பெறும் முன்பு கட்டிட வேலை துவங்கி விட்டால் மேற்கண்ட கட்டிட அனுமதி கட்டணத்தில் 50 % கூடுதல் கட்டணமாக செலுத்தவேண்டும். | | |
| 16. | | | 5 ஆண்டுகள் | கட்டிட இடிபாடு பொருட்கள் அல்லது கல், மணல், ஜல்லி ஆகியவைகளை வெளிப்புறமாக கொட்டி ஆக்கிரமிப்பு செய்வதற்கு அனுமதி கட்டணத்தில் 25 % கூடுதல் கட்டணமாக செலுத்தவேண்டும். | | |
| 17. | | | 5 ஆண்டுகள் | கட்டிட இடிபாடு பொருட்கள் அகற்றுவதற்கான கட்டணம், கட்டிட அனுமதி கட்டணத்தில் 50 % கூடுதல் கட்டணமாக செலுத்தவேண்டும். | | |
| 18. | | கட்டிட அனுமதியை புதுப்பித்துக்கொள்ள | ஒரு தடைவை 3 ஆண்டுகள் | ஒரு தடைவை மட்டும் | – | முதலில் செலுத்தப்பட்ட கட்டிட அனுமதி கட்டணத்தில் 100 % கட்டணமாக செலுத்தவேண் டும். |
| 19. | | நகரமைப்பு ஆய்வர் ஆய்வுக் கட்டணம் | | | | |
| அ. | | குடியிருப்பு கட்டிடம் | | | 200.00 | 500.00 |
| ஆ. | | வணிக சம்மந்தப்பட்ட கட்டிடங்கள் | | | 800.00 | 1000.00 |
| இ. | | தொழிற்சாலை கட்டிடங்கள் | | | 1000.00 | 2000.00 |
| ஈ. | | இதர கட்டிடங்கள் | | | 600.00 | 1000.00 |
| 20 | | மனைப்பிரிவுகள் | | | | |
| அ. | | மனைப்பிரிவு அனுமதி கோரும் போது வசூலிக்கப்படவேண்டி ய அபிவிருத்தி கட்டணம் | | ஒரு ஏக்கருக்கு | 6000.00 | 15000.00 |
| ஆ. | | நகரமைப்பு ஆய்வர் ஆய்வுக்கட்டணம் | | மனைப்பிரி வு ஒன்றுக்கு | நிர்ணயம் செய்யப்ப டவில்லை | 5000.00 |

**நகரமைப்பு பிரிவு ஆக்கிரமிப்பு மற்றும் இதர கட்டண விகித பட்டியல்.**

| வ.எ ண். | 1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்ட பிரிவு | ஏதற்காக உரிமக் கட்டணம் மற்றும் வரியில்லா இனம் விதிக்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் | கால அளவு | பரப்பளவு | தற்போது வசூலிக்கப்ப டும் கட்டணம் ரூ. | திருத்தியமைக்கப்பட்ட புதிய கட்டணம் ரூ. 01.04.2015 முதல் |
|---|---|---|---|---|---|---|
| 1. | 176 (3) | தனிப்பட்ட நபருக்கு சொந்தமான தெரு முதல் தடவையாக திறப்பதற்கு அங்கீகாரம் பெற. | | | | |
| | | 10–15 அடி அகலம் உள்ள தெரு ஒவ்வொரு 100 அடிக்கு | ஒரு தடவை | 30 மீட்டருக்கு | 100.00 | 250.00 |
| | | 16–25 அடி அகலம் உள்ள | ஒரு | 30 | 200.00 | 500.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | தெரு ஒவ்வொரு 100 அடிக்கு | தடவை | மீட்டருக்கு | | |
| | | 26–30 அடி அகலம் உள்ள தெரு ஒவ்வொரு 100 அடிக்கு | ஒரு தடவை | 30 மீட்டருக்கு | 200.00 | 600.00 |
| | | 31–40 அடி அகலம் உள்ள தெரு ஒவ்வொரு 100 அடிக்கு | ஒரு தடவை | 30 மீட்டருக்கு | 300.00 | 250.00 |
| | | 41 அடி மற்றும் அதற்கு மேலும் உள்ள தெரு | ஒரு தடவை | 30 மீட்டருக்கு | 500.00 | 750.00 |
| 2. | 181 (2) | தெரு பக்கமாக திறக்கும்படி அடித்தள கதவுகள் ஏற்கெனவே வைத்திருந்தால் ஒவ்வொரு கதவிற்கும் | ஐந்து வருடத் திற்கு | ஒரு தடவை | 100.00 | 500.00 |
| 3. | 181 (1) | மாடி வீடுகளில் அடிதளத்திற்கு ஏற்கனவே பொருத்தப்பட்டிருக்கும் தெரு பக்கமாக திறக்கப்படும் ஜன்னல்களுக்கு. | ஐந்து வருடத் திற்கு | ஒரு தடவை | 50.00 | 400.00 |
| 4. | 181 (2) | மாடிகளில் மேல் மாடியில் பொருத்தப்பட்டிருக்கும் ஜன்னல் ஒவ்வொன்றிற்கும். | ஐந்து வருடத் திற்கு | ஒரு தடவை | 50.00 | 400.00 |
| 5. | 183 (2) | கோயில்கள் எதிரிலும் மத போதனை ஸ்தாபன கட்டிடங்கள் எதிரிலும், திருவிழா காலங்களிலும், மத போதனை கட்டிடங்கள் நடத்தும் போதும் பந்தல்கள் போட்டுக்கொள்ள 7 நாட்களுக்கு. | ஏழு நாட்க ளுக்கு | ஒரு சதுர மீட்டருக்கு | 20.00 | 20.00 |
| 6. | 183 (2) | கோடைக்கால பந்தல்கள் தெருவின் ஜன போக்குவரத்திற்கு இடைஞ்சல் இல்லாமல் தெருவின் நீளத்திற்கும், அகலத்திற்கும் பிப்ரவரி 15 ஆம் தேதி முதல் ஜீன் 15 ஆம் தேதி வரை உள்ள நான்கு மாதத்திற்கு ே பாட்டுக்கொள்வதற்கு. | வணிக பயன்ப ாட்டிற் கு | ஒரு சதுர மீட்டருக்கு | 20.00 | 50.00 (ஒரு மாதத்திற்கு) |
| 7. | 183 (2) | தற்காலிக பந்தல்கள் கல்யாணங்களுக்கும் மற்ற காரியங்களுக்கும் போட்டுக்கொள்ள 10 சதுர மீட்டருக்கும் அதற்கு குறைந்த பாகத்திற்கும் (குறிப்பு) ரோட்டில் தார் போடப்பட்ட பாகத்திற்கு துவாரங்கள் செய்யக்கூடாது அவ்வாறு செய்ய நேரிடின் மேற்படி தற்காலிக பந்தல்கள் போட அனுமதிக்கப்படமாட்டாது. | மூன்று தினங் களுக் கு | 10 சதுர மீட்டருக்கு | 100.00 | 200.00 |
| 8. | 183 (2) | துக்க நிகழ்ச்சிகளுக்குதற்காலிக பந்தல் அமைத்துக்கொள்வதற்கு. | | | | இலவசம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9. | 183 (3) | கட்டிடங்களின் பாகங்களை ஆக்கிரமிப்பு செய்துள்ளதற்கு குத்தகைக்கு விட ஒரு சதுர மீட்டருக்கு. | ஒரு வருடத் திற்கு | ஒரு சதுர மீட்டருக்கு | 20.00 | 100.00 |
| 10. | 183 (2) | சாரம் கட்டியும் கட்டிடம் கட்டும் சாமான்கள் வீதிகளில் சேகரிக்கும் போது தெருக்களில் போக்குவரத்தை தடை செய்யும் வகையில் போடப்பட்டவைகளுக்கு ஒரு சதுர மீட்டருக்கு ஒரு நாளைக்கு அதன் குறைந்த பட்சத்திற்கும். | ஒரு தடவை | ஒரு சதுர மீட்டருக்கு | 20.00 | 40.00 |
| 11. | 208 | 10 சதுர மீட்டர் அல்லது அதன் பாகத்திற்கு குடிசை கட்டவோ அல்லது புதுப்பித்து கட்டவோ | ஒரு வருடத் திற்கு | ஒரு சதுர மீட்டருக்கு | 200.00 | 500.00 |
| 12. | 215 | கட்டிடத்தின் அளவுகளில் எவ்வித மாறுதல் இன்றி சோலைக் கூரையை பிரித்து மறு கூரை போடுதல் ரிப்பேர் செய்து கொள்ள. | – | – | 100.00 | 500.00 |
| 13. | | சொத்துவரி, தொழில்வரி, மற்றும் காலிமனைவரி கேட்பு பதிவேடு உண்மை நகல் எடுத்தல் (கணினியில் எடுத்து வழங்க) | ஒரு தடவை | ஒரு வரிவிதிப்பு எண்ணுக் கு | 100.00 | 250.00 |
| 14. | | சொத்துவரி, தொழில்வரி, மற்றும் காலிமனைவரி கேட்பு பதிவேடு உண்மை நகல் எடுத்தல் (கூடுதல் நகல்பெற) (கணினியில் எடுத்து வழங்க) | ஒரு வரிவி திப்பு எண் ணுக்கு | கூடுதல் நகல் ஒன்றுக்கு | 100.00 | 250.00 |
| 15. | | சொத்துவரி, தொழில்வரி, மற்றும் காலிமனைவரி கேட்பு வசூல் விவரம் கணினியில் உள்ள பதிவினை நகல் உண்மை நகல் வழங்க | ஒரு தடவை | ஒரு வரிவிதிப்பு எண்ணுக் கு | 100.00 | 500.00 |
| 16. | | வீட்டு வரி மற்றும் காலிமனைவரி எண்ணும் வருடவாடகை மதிப்பு சான்று வழங்க. (Annual Rental Certificate) | ஒரு வரி விதிப்பு எண்க ளுக்கு | சான்று ஒன்றுக்கு | 100.00 | 1000.00 |
| 17. | | சங்கிலி போட்டு இடத்தை அளந்து அத்து காண்பிக்க. | – | ஒரு நகரளவை எண்ணுக் கு | 200.00 | 1000.00 |
| 18. | | நகரளவு சர்வே புலப்பட நகல் தயாரித்து வழங்க | ஒரு நகரள வை எண் ணுக்கு | ஒரு நகலுக்கு | 200.00 | 1000.00 |
| 19. | | கட்டிட அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்திற்கு | – | ஒரு வரைபடத் | 100.00 | 250.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | உண்மை நகல் பெற. | | திற்கு | | |
| 20. | | அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு உண்மை நகல் வழங்க. | – | ஒரு வரைபடத் திற்கு | 100.00 | 400.00 |
| 21. | | திட்ட வரைபட நகல் ஒன்றுக்கு | – | – | 250.00 | 1000.00 |
| 22. | | வாரண்ட் மற்றும் ஜப்தி கட்டணம் | – | ஒன்றுக்கு | 100.00 | 750.00 |
| 23. | | நகர் மன்றத்தின் தீர்மான நகல் வழங்க | – | ஒரு தீர்மானத்தி ற்கு | 100.00 | 500.00 |
| 24. | | கட்டிட வரைவாளர் உரிமம் பெற நியமன வைப்புத் தொகை | – | – | 2000.00 | 5000.00 |
| 25. | | கட்டிட வரைவாளர் உரிமம் பெற பதிவுக் கட்டணம் | – | – | 1000.00 | 5000.00 |
| 26. | | உரிமம் பெற்ற கட்டிட வரைவாளர் புதுப்பித்துக்கொள்ள கட்டணம் நிதியாண்டு முடியும் தேதியின் 30 நாட்களுக்கு முன்பு புதுப்பித்துக்கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் உரிமம் புதுப்பித்தல் கட்டணத்தில் 25 சதவீதம் அபராத கட்டணம் கூடுதலாக செலுததவேண்டும் | – | – | 5000.00 | 10000.00 |
| 27. | | மழைநீர் சேகரிப்பு கட்டுமானம் கட்டுதல் முன் வைப்புத் தொகை | | | | |
| 28. | 93 ச.மீட்டர் வரை | | 5 ஆண் டுகள் | | 500.00 | 5000.00 |
| 29. | 93 ச.மீட்டருக்கு மேல் | | 5 ஆண் டுகள் | | 1000.00 | 10000.00 |

<u>**பொருள் எண். 5.**</u>

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ.3,70,000/– மதிப்பீட்டில் நகராட்சிக்குட்பட்ட 17 இடங்களில் சோலார் தெருவிளக்கு அமைக்கும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மாணம் எண். 3315, நாள்.31.01.2019ல் அனுமதியளித்தற்கிணங்க 01.03.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1 | M/s,Syscon Systems,<br>4/4,2nd line,VGP Salai,<br>West Saidapet,Chennai -15 | (-) 0.01 % குறைவு |
| 2 | Sagar Electtonics,<br>111/72,Vallalar Street,<br>Venkatesa Colony,Pollachi. | (+) 0.45 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் M/s,Syscon Systems,4/4,2nd line,VGP Salai,West Saidapet,Chennai -15 நிறுவனம் அளித்துள்ள **0.01** % ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 659/19/இ1)

**தீர்மானம் எண். 3350 , நாள். 05.03.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6.**

விருத்தாசலம் நகராட்சியில் கல்வி நிதியின் கீழ் ரூ.2,41,500/– மதிப்பீட்டில் நகராட்சிக்கு சொந்தமான 5 துவக்கப்பள்ளியில் சோலார் பேனல் அமைக்கும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மாணம் எண். 3316, நாள்.31.01.2019ல் அனுமதியளித்தற்கிணங்க 01.03.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1 | M/s,Syscon Systems,<br>4/4,2nd line,VGP Salai,<br>West Saidapet,Chennai -15 | (-) 0.02 % குறைவு |
| 2 | Sagar Electtonics,<br>111/72,Vallalar Street,<br>Venkatesa Colony,Pollachi. | (+) 0.40 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் M/s,Syscon Systems,4/4,2nd line,VGP Salai,West Saidapet,Chennai -15 நிறுவனம் அளித்துள்ள **0.02** % ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 659/19/இ1)

**தீர்மானம் எண். 3351 , நாள். 05.03.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7.**

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ.9,95,000/– மதிப்பீட்டில் நகராட்சிக்கு சொந்தமான டம்பர் பிளேசர் லாரியை கழிவு நீர் அகற்றும் லாரியாக மாற்றும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மாணம் எண். 3317, நாள்.31.01.2019ல் அனுமதியளித்தற்கிணங்க 01.03.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1 | Lakshmi Auto diesel works,<br>Salem Road, Mettur Dam. | (-) 0.01 % குறைவு |
| 2 | J.V.K Auto diesel works,<br>279/28,JVK Campus,<br>Kalarampaat main road, Salem. | (+) 0.31 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் Lakshmi Auto diesel works,Salem Road,Mettur Dam நிறுவனம் அளித்துள்ள 0.01 % ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 659/19/இ1)

**தீர்மானம் எண். 3352 , நாள். 05.03.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8.**

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ.5,00,000/– மதிப்பீட்டில் நகராட்சியில் உள்ள பேட்டரி வாகனங்களுக்கு பவர் ஸ்டேஷன் மற்றும் செட் அமைக்கும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மாணம் எண். 3318, நாள்.31.01.2019ல் அனுமதியளித்தற்கிணங்க 01.03.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.ஜி.பாலசுப்பிரமணியன்,<br>ஒப்பந்ததாரர் | (-) 0.08 % குறைவு |
| 2 | திரு.டி.ராஜாராம்பட்டு,<br>ஒப்பந்ததாரர் | (+) 1.30 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திரு.ஜி.பாலசுப்பிரமணியன்,ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.08 % ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 659/19/இ1)

**தீர்மானம் எண். 3353 , நாள். 05.03.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9.**

விருத்தாசலம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2015–16 நிதியின் கீழ் ரூ.7,10,000/– மதிப்பீட்டில் வயலூர் உரக்கிடங்கில் அமைக்கப்பட்டுள்ள மெஷினரி ஷெட்டில் கூடுதல் பணிக்கு இந்நகரமன்ற தீர்மாணம் எண்.3296, நாள்.31.12.2018ல் அனுமதியளித்தற்கிணங்க 01.03.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1 | ஸ்ரீ ஐஸ்வர்யா கன்ஸ்டக்ரஷன்ஸ்,<br>வடக்குத்து | (-) 0.18 % குறைவு |
| 2 | திரு.கே.சிவகுருநாதன்,<br>ஒப்பந்ததாரர் | (+) 1.43 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் ஸ்ரீ ஐஸ்வர்யா கன்ஸ்டக்ரஷன்ஸ், வடக்குத்து நிறுவனம் அளித்துள்ள 0.18 % ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 9519/15/இ1)

**தீர்மானம் எண். 3354 , நாள். 05.03.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10.**

விருத்தாசலம் நகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ் ரூ.9,95,000/— மதிப்பீட்டில் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் உள்ள குடிநீர் மெயின் பைப்லைன் மற்றும் விநியோக பைப்லைனில் ஏற்படும் பழுதுகளை நீக்கும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண். 3287, நாள்.31.12.2018ல் அனுமதியளித்தற்கிணங்க 28.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.ராதாகிருஷ்ணன், ஒப்பந்ததாரர் | (-) 0.03 % குறைவு |
| 2 | திரு.வி.பழனிசாமி, ஒப்பந்ததாரர் | (+) 0.31 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.03 % ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 659/19/இ1)

**தீர்மானம் எண். 3355 , நாள். 05.03.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11.**

## 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் கீழ் ஏற்படுத்தப்படும் உப விதிகள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2018 ஜூன் 5ம் நாளன்று தமிழ்நாடு சட்ட மன்ற வேரவையில் 110 விதிகளின் கீழ் தமிழ்நாடு மாநிலமானது பயன்படுத்தப்பட்டு வீசப்படும் நெகிழியை தடைசெய்யும் பொருட்டு 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்புச்) சட்டத்தின்படி (மையச்சட்டம். 29/1986) 2019 ஜனவரி 1ல் இருந்து நடைமுறையில் பயன்படுத்தப்படும் நெகிழி பொருட்களை உற்பத்தி செய்வதை, போக்குவரத்து செய்வதை, சேமித்து வைத்தலை, பகிர்ந்தளித்தலை மற்றும் பயன்பாட்டினை தடை செய்து, அறிவைப்பினை வெளியிட்டார்கள். இந்த நோக்கத்திற்காக அரசானது இந்திய அரசின் 1986—ஆம் ஆண்டு பிப்ரவரி 10ஆம் தேதியிடப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தின் எண். S.O.152(E) ன் உடன் இணைந்த மையச்சட்டம் 29/1986ன் பிரிவு 5ன்படி அறிக்கை வெளியிட்டுள்ளது. எழுத்து மூலமாகவும், செயல் ரீதியாகவும் பயன்படுத்தப்படும் மற்றும் தூக்கி வீசப்படும் நெகிழி பொருட்களை தடை செய்வதை நிறைவேற்றும் பொருட்டு, மேலே கூறப்பட்ட நெகிழி பொருட்களை தடை செய்வது தொடர்பாக வகைமுறைகளை மீறும் போது

பணத்தண்டன் விதிப்பதற்கு ஏதுவாக 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டத்தின் கீழ் கீழ்கண்டவாறு உப விதிகள் ஏற்படுத்தலாம்.

| | | |
|---|---|---|
| I | 1. | **செயலாக்க அதிகாரி :** நகராட்சி பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவார். |
| | 2. | **ஆய்வு நடத்தும் அதிகாரி :** ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சிப் பகுதிகளில் துப்புரவு பணிமேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர், துப்புரவு அலுவலர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவார். |
| | 3. | **மேல் முறையீட்டு அலுவலர் :** இந்த உப விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருடளக்கம் தொடர்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார். |
| | 4. | **தண்டனைகள் விதிக்கும் முறைகள் :** மேற்படி சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள ஷரத்துக்களை மீறுபவர்களுக்கு உடனடி ஸ்தல அபராதம், குடிநீர் இணைப்பு துண்டித்தல், பொருட்களை பறிமுதல் செய்தல் அச்சம் மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கான உரிமம் ரத்து செய்தல் (D&O) முதலியன தண்டனை முறைகள் மற்றும் சட்டப்படியான நடவடிக்கைகள். |
| II | (v) | **வர்த்தக நிறுவனங்களின் வகைபாடு.** |
| | 1. | **1 ச. அடி முதல் 500 ச. அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்.** |
| | 2. | **501 ச. அடி முதல் 1000 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்.** |
| | 3. | **1001 ச. அடி முதல் 1500 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்.** |
| | 4. | **1501 ச. அடி முதல் 2000 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்.** |
| | 5. | **2000 ம் அதற்கு மேல்.** |
| III | | **வணிக வளாகங்கள்** |
| | 1. | **பெரிய மற்றும் சிறிய துணிக்கடைகள்.** |
| | 2. | **பல்பொருள் அங்காடிகள் பெரியது.** |
| | 3. | **திரையரங்குகள்.** |
| | 4. | **அரசு மதுபானக்கடை, மதுபான விற்பனைக் கூடங்கள்** (BARS) மனமகிழ் மன்றம் முதலான இதர இனங்கள். |
| | 5. | **கல்வி நிறுவன வளாகங்கள்.** |
| | 6. | **அரசு, அரசு சார்பு நிறுனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் வளாகங்கள்.** |
| | 7. | **திருமண மண்டபங்கள், தங்கும் விடுதிகள் முதலானவை.** |
| IV | | **பெரிய, நடுத்தர, காய்கறிகடைகள், பழக்கடைகள், மருந்துக்கடைகள் உணவகங்கள் பழச்சாறு விற்பனைக்கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள் முதலானவைகள்.** |
| V | | **சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோர கடைகாரர்கள் மற்றும் இதர வணிகம் செய்பவர்கள்.** |

| | | |
|---|---|---|
| II | | **தண்டனைகள் விவரம்.** |
| | | **பிரிவு 306** (28-A) இன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள் |

| வரிசை எண். | குற்றங்கள் | முதன்முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| 1. | வணிக நிறுவனங்களில் பயன்படுத்தக்கூடிய மற்றும் தூக்கி வீசப்படக்கூடிய நெகிழியை சேமித்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல் விற்பனை | ரூ. 25000/– இருபத்தைந்தாயிரம் ரூபாய். | ரூ. 50000/– ஐம்பதாயிரம் ரூபாய். | ரூ. 100000/– ஒரு லட்சம் ரூபாய். |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல். | | | |
| 2. | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தக்கூடிய மற்றும் தூக்கி வீசப்படக்கூடிய நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | ரூ. 10000/– பத்தாயிரம் ரூபாய். | ரூ. 15000/– பதினைந்தாயிரம் ரூபாய். | ரூ. 25000/– இருபத்தைந்தாயிரம் ரூபாய். |
| 3. | மளிகை கடைகள் மற்றும் மருந்து கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தக்கூடிய மற்றும் தூக்கி வீசப்படக்கூடிய நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | ரூ. 1000/– ஓராயிரம் ரூபாய். | ரூ. 2000/– இரண்டாயிரம் ரூபாய். | ரூ. 5000/– ஐந்தாயிரம் ரூபாய். |
| 4. | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தக்கூடிய மற்றும் தூக்கி வீசப்படக்கூடிய நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | ரூ. 100/– ஒரு நூறு ரூபாய். | ரூ. 200/– இரு நூறு ரூபாய். | ரூ. 500/– ஐநூறு ரூபாய். |

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தினசரி நாளிதழில் மற்றும் அரசிதழில் விளம்பரம் வெளியிட ஆகும் செலவினத்தை மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 804/2014எச்1.

**தீர்மானம் எண். 3356 , நாள். 05.03.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12.**

விருத்தாசலம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2015–16ன் கீழ் ரூ. 15.80 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண். 6 கல்லூரி நகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி வளாகத்தில் மெஷினரி ஷெட் அமைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கடலூர் அவர்களின் மூலமாக கீழ்கண்ட தினசரி நாளிதழில் வெளியிட்டதற்கான தொகை சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | தினசரி நாளிதழ் பெயர் | விளம்பரம் வெளிவந்த நாள் | தொகை ரூ. | செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் / கடலூர் அவர்களின் ஆணை எண். |
|---|---|---|---|---|
| 1. | தினகுரல் | 02.03.2019 | 23520/– | ஆணை எண். 27/ஒப்பந்தபுள்ளி/விளம்பரம்/2018, நாள். 01.03.2019. |

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3357 , நாள். 05.03.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 13.</u>**

விருத்தாசலம் நகராட்சி வார்டு எண். 2ல் கண்டியங்குப்பம் உரக்கிடங்கில் Shredding Machine க்கு மழைகாலங்களில் நனையாமல் இருக்கவும் சாரல் அடித்து துருபிடிக்காமல் இருக்கவும், பக்கவாட்டில் சீட் அமைப்பதற்கும் Shredding Machine பதிப்பதற்கு கான்கிரீட்டிலான மேடை அமைப்பதற்கும் மற்றும் லைட் வசதி செய்தல், கேபிள் பதித்தல் மற்றும் செடிகளுக்கு தண்ணீர் விடுவதற்கும் பைப்லைன் அமைத்தல் போன்ற வேலைகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 9.95 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3358 , நாள். 05.03.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 14.</u>**

விருத்தாசலம் நகராட்சி அலுவலகம் கட்டி பல ஆண்டுகள் ஆகின்ற காரணத்தால் மழைகாலங்களில் கட்டிடத்தில் கசிவு ஏற்படுவதால், பொறியியல் பிரிவு மற்றும் துப்புரவு ஆய்வாளர் அறை மராமத்து செய்யும் பணி மற்றும் ஆணையர் அறைக்கு Carpet மாற்றும் பணி ஒயரிங் செய்யும் பணி, தட்டு ஓட்டு ஒடு பதிக்கும் பணி மற்றும் வர்ணம் பூசும் பணி போன்ற பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 8.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3359 , நாள். 05.03.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 15.</u>**

விருத்தாசலம் நகராட்சி வார்டு எண். 13ல் அண்ணா நகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி வளாகத்தில் மிகவும் பள்ளமாக இருப்பதால் கிராவல் நிரப்பவும், மோட்டார் ஆப்பரேட்டருக்கு பம்ப்ரூம் அமைப்பதற்கும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3360 , நாள். 05.03.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 16.</u>**

விருத்தாசலம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் வார்டு அலுவலகம் தற்போது இயங்கிவருகிறது. நகராட்சிக்கு வருமானம் ஈட்டும் பொருட்டு வார்டு அலுவலகத்தை கடையாக மாற்றி நகராட்சிக்கு சொந்தமான ஜங்ஷன் ரோட்டில் உள்ள ஆட்டுத் தொட்டியில் வார்டு அலுவலகம் கட்டும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3361 , நாள். 05.03.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 17.</u>**

விருத்தாசலம் நகராட்சி வார்டு எண். 15ல் கஸ்பா காலணியில் உள்ள சுகாதார வளாகம் மக்கள் பயன்பாட்டிற்கு தண்ணீர் இல்லாததால் பயன்படுத்த முடியாமல் உள்ளது. மேலும் அப்பகுதியில் தண்ணீர் பற்றாக்குறை உள்ளதாலும் வருகின்ற கோடைகாலத்தை கருத்தில் கொண்டு பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் சீராக கிடைத்திட அவ்விடத்தில் புதிய போர்வெல் அமைத்து பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்திடவும், சுகாதார வளாகத்திற்கு தண்ணீர் சப்ளை செய்வதற்கும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3362 , நாள். 05.03.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 18.</u>**

விருத்தாசலம் நகராட்சி வார்டு எண். 2ல் கண்டியங்குப்பம் உரக்கிடங்கில் செடி வளர்ப்பதாலும் மற்றும் Shed work நடப்பதாலும் நாய்கள் கருத்தடை அரங்கம் உள்ளதாலும் குப்பைகளை பிரிக்கும் தொட்டிகள் அமைக்கப்பட்டதாலும் அவ்விடத்திற்கு தண்ணீர் அவசியம் என்பதாலும் அங்கு வேலை செய்யும் நபர்களுக்கு குடிநீர் அவசியம் தேவை என்பதாலும் அப்பகுதிக்கு நேரில் சென்று ஆய்வு செய்து புதிய போர்வெல் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3363 , நாள். 05.03.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 19.**

விருத்தாசலம் நகராட்சி வடக்கு வீரபாண்டியன் தெருவில் சரிவர குடிநீர் வரவில்லை என பொது மக்களும் முன்னாள் நகரமன்ற உறுப்பினரும் கேட்டுக்கொண்டதற்கிணங்கவும் மேலும் தற்பொழுது கோடைகாலம் வருகின்ற காரணத்தால் அப்பகுதி மக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியத்தால் அப்பகுதிக்கு நேரில் சென்று ஆய்வு செய்து புதிய போர்வெல் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3364 , நாள். 05.03.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 20.**

விருத்தாசலம் நகராட்சி வார்டு எண். 5ல் நாச்சியார் பேட்டையில் குடிநீர் தட்டுபாட்டை நீக்கும் பொருட்டு வரும் கோடை காலத்தை கருத்தில் கொண்டு அப்பகுதி மக்களும் முன்னாள் நகரமன்ற உறுப்பினரும் அப்பகுதிக்கு புதிய போர்வெல் அமைத்து தண்ணீர் வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டதற்கிணங்க அப்பகுதிக்கு நேரில் சென்று ஆய்வு செய்து தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3365 , நாள். 05.03.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 21.**

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. 27100/– மதிப்பீட்டில் வானொலி திடல் பொதுகூட்ட மேடைக்கான மின் இணைப்பின் சர்வீஸ் ஒயர்களை 7/16 காப்பர் ஒயர் போட்டு 200 Ams carrier அமைக்கும் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மான எண். 3186, நாள். 23.10.2018ல் அனுமதியளித்ததற்கிணங்க 21.02.2019 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | ஜெயம் எலக்ட்ரிகல்ஸ்,<br>27, ஜங்ஷன் ரோடு,<br>விருத்தாசலம். | 27080/– |

| | | |
|---|---|---|
| 2. | ஸ்ரீ சிவா எலக்ட்ரிகல்ஸ்,<br>183, கடலூர் ரோடு,<br>விருத்தாசலம். | 28330/– |
| 3. | வீனஸ் டிரேடர்ஸ்,<br>61, ஜங்ஷன் ரோடு,<br>விருத்தாசலம். | 30420/– |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் காணும் ஜெயம் எலக்ட்ரிகல்ஸ், 27, ஜங்ஷன் ரோடு, விருத்தாசலம் நிறுவனம் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 3366 , நாள். 05.03.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 22.**

விருத்தாசலம் நகராட்சிக்கு சொந்தமான காட்டுக்கூடலூர் ரோடு கணினி வரி வசூல் மையம் BSNL லைன் மோடம் பழுது அடைந்து உள்ளதால் இண்டெர்நெட் இணைப்பு அடிக்கடி விட்டு விட்டு வருவதால் வரி வசூல் பணி மிகவும் பாதிப்படைவதால், வரி வசூல் பணியினை கருத்திற்கொண்டு பணியின் அவசரம் அவசியம் கருதி aps infosystem, 85/28, கடைவீதி, விருத்தாசலம் நிறுவனத்திடமிருந்து உள்ளூர் விலைப்புள்ளி பெறப்பட்டு புதிய மோடம் ரூ. 1950/– க்கு வாங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3367 , நாள். 05.03.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 23.**

இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் கட்டப்பட்ட தற்காலிக 23 கடைகள் குறித்து சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் விருத்தாசலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்து வந்த நிலையில் மேற்கண்ட இரு வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக தெரிகிறது. எனவே நகராட்சிக்கு கணிசமான வருவாய் பெருக்கும் நோக்கில் மேற்கண்ட 23 கடைகளை ஏலம் விட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் மேற்கண்ட கடைகள் நீண்ட நெடுங்காலமாக கம்பி வேலி வைத்து அடைக்கப்பட்டிருந்தாலும் பொது மக்கள் குப்பை முதலியவற்றை வீசியதாலும் கடை கட்டிடம் சிதிலமடைந்தும் சிமெண்ட் காரைகள் பெயர்ந்தும் உள்ளதால் ஏலம் விடும் முன் கட்டிடம் கட்டி புனரமைத்துக் கொள்ள ஏதுவாக ஏலதாரர்கள் தனியே முன் வைப்புத் தொகை செலுத்தத் தெரிவிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மேற்கண்ட கடைகளை ஏலம் விட ஏல முன் வைப்புத் தொகை நிர்ணயம் செய்யலாம்.
2. சொத்து மதிப்பு சான்று நிர்ணயம் செய்யலாம்.
3. கட்டிடம் புனரமைத்து கட்டிட வைப்புத் தொகை நிர்ணயம் செய்யலாம்.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 3368 , நாள். 05.03.2019.**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 24.</u>**

விருத்தாசலம் நகராட்சி பொது பிரிவு, வருவாய் பிரிவு, பொது சுகாதார பிரிவு, நகரமைப்பு பிரிவு மற்றும் பொறியியல் பிரிவுகளில் உள்ள பிரிண்டர்களின் டோனர் ரீபிள் மற்றும் சர்வீஸ் செய்ய 2019–2020 ஆம் ஆண்டுக்கு ஏற்படும் தோராய செலவினம் ரூ. 60000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3369 , நாள். 05.03.2019.**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 25.</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பழனி முருகன் நகரில் பொது மக்கள் நலன் கருதி சாலை அமைக்கும் பணி மேற்கொண்டதை எதிர்த்து திரு. காமராஜன் என்பவர் W.P.No. 22189/2012ல் மேற்படி இடம் தனக்கு சொந்தமான இடமென வழக்கு தொடர்ந்துள்ளார். இதையடுத்து தற்போது மேற்படி இடமானது பொது இடம் என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதாக தீர்ப்பு வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி வழக்கில் ஆஜரான திரு. ஆர்.பி. பிரதாப் சிங், வழக்கறிஞர், சென்னை அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ. 19000/–ஐ செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 7507/2018/எப்1)

**தீர்மானம் எண். 3370 , நாள். 05.03.2019.**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 26.</u>**

இந்நகராட்சி பகுதியில் உள்ள அனுமதியற்ற கட்டிடங்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டதில் திருமதி. வஜிதேவி என்பவரது கட்டிடம் பூட்டி சீல் வைக்கப்பட்டதை எதிர்த்து அன்னார் W.P.No. 28534/2016ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராகி வரும் திரு. ஆர்.பி. பிரதாப் சிங், வழக்கறிஞர், சென்னை அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ. 15000/–ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 7/2016/எப்1)

**தீர்மானம் எண். 3371 , நாள். 05.03.2019.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 27.**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்காணும் இடத்தில் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் II SH-70 விருத்தாசலம் என்ற திட்டத்தின் கீழ் பரங்கிபேட்டை சாலை மேம்பாட்டு பணிக்காக தென்னக ரயில்வே துறைக்கு நில உரிமை மாற்றம் செய்திட இந்நகராட்சி இசைவு கோரி தனி வட்டாட்சியர் (நி.எ) விருத்தாசலம் அவர்களிடமிருந்து ந.க.எண். அ/6/2014, நாள். 11.01.2019ல் கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்படி நில உரிமை மாற்றம் செய்து கொள்ள இசைவு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. விபரம் கீழ்வருமாறு.

| வ.எண். | கிராமம் | புல எண் | வகைபாடு | மொத்த பரப்பு (ச.மீ) | நில மாற்றத்திற்கு உட்படும் பரப்பு (ச.மீ) |
|---|---|---|---|---|---|
| 1. | பூதாமூர் | வார்டு –F<br>பிளாக் – 25<br>T.S.No. 27 | பாட்டை | 04650 | 00077 |
| 2. | பூதாமூர் | வார்டு –F<br>பிளாக் – 19<br>T.S.No. 21 | தெரு | 02250 | 00009 |

**அலுவலக குறிப்பு:**
மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 3608/2017/எப்1)

**தீர்மானம் எண். 3372 , நாள். 05.03.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 28.**

அரசாணை எண். 62, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள். 11.10.2017ன்படி மாநகராட்சி, நகராட்சி, போரூராட்சி மற்றும் ஊராட்சியில் பணிபுரியும் அடிப்படை ஊழியர்களுக்கு ஊதியம் உயர்த்தி வழங்குவது தொடர்பாகவும், மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு 2017–18 ஆம் ஆண்டுக்கான சட்டப்பேரவை அறிவிப்பு எண். 12ல் நகராட்சி அமைப்புகளில் பணிபுரிந்து வரும் துப்புரவு பணியாளர்களுக்கு நகராட்சி பங்களிப்புடன் “சிறப்பு ஆயுள் காப்பீட்டுத்திட்டம்” செயல்படுத்தப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சியில் மேற்படி அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையைவிட குறைவாக நேரடியாக ஊதியம் பெறும் அடிப்படை பணியாளர்கள் எவரும் இல்லை என்ற தகவலை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 3889/18/எச்1)

**தீர்மானம் எண். 3373 , நாள். 05.03.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 29.</u>**

விருத்தாசலம் நகராட்சியில் 2009–10 ஆம் ஆண்டு முதல் 2015–16ஆம் ஆண்டு முடிய உள்ள காலத்தில் தாமதமாக செலுத்தப்பட்ட வருமான வரித்தொகை, அபராத தொகை வட்டித்தொகை ஆகியவைகளுக்கு தொகை ரூ. 1391108/—ஐ வருமானவரித்துறைக்கு செலுத்தாமல் முறையாக மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டும் அதற்கான பணம் திரு. டி. கண்ணுசாமி பட்டய தணிக்கையாளர் மூலம் உரிய பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணிக்கான தணிக்கையாளர் கட்டணம், பாண்டிச்சேரி வருமான வரித் துறைக்கு அவ்வப்போது நேரில் ஆஜராகி விவரங்கள் தெரிவிக்கவும், மேற்படி மேல்முறையீடு மனுக்கள் தயார் செய்தல் போன்றவைகளுக்கான தோராய செலவினம் ரூ. 400000/—க்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 5659/2018/சி1)

**தீர்மானம் எண். 3374, நாள். 05.03.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

தனி அலுவலர் / ஆணையாளர்,
விருத்தாசலம் நகராட்சி